உ

திருவள்ளுவர்.

மாதந்தோறும் வெளிவரும்,

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

தொகுதி க.] ராக்ஷஸ-வூ பங்குனி-மீ. [பகுதி க.

உள்ளுறை. பக்கம்.

முகவுரை	1
பத்திராதிபரின் குறிப்புகள்	3
சுயநலம் பாராட்டல்	4
நன்றி	5
பயிர்த்தொழில்	7
கைத்தொழில் முயற்சி	10
விவாஹம்	13
சமாச்சாரக்குறிப்புகள்	15
பெரியோர்களின் அபிப்பிராயங்கள்	16
யுக்திக்குறிப்புகள்	16
பலசரக்கு	...

பத்திராதிபர்:—**K. S.** சுப்பிரமணிய பிள்ளை
கோயமுத்தூர்.

வருஷசந்தா ரூ 1
தபாற்கூலி அணா 2

வெளிநாட்டுக்கு ரூ 2
தனி சஞ்சிகை அ. 2

இம்மானுவேல் பிரஸ், கோயமுத்தூர்.

6 - APR 191
MADRAS

Selected Opinions.

I have much pleasure in certifying that **Mr. K S. Subramanya Pillai,** son of **Mr. R. Sabapathi Pillai**, Late Tamil Pandit, Coimbatore College is a gentleman of good charactor, keenly interested in Tamil Literature. He intends starting a Tamil Journal called **"Thiruvalluvar"**. I am sure that under his editorship the journal will be very useful to the public. I wish him every success in his career as a Journalist and I hope his periodical will be a real acuisition to the Tamil Magazine Literature.

Arogya Vilasa,
Coimbatore,
19—7—1914.

(Sd.) **M. G. Arogyasawmy, Pillai,**
Hon Chairman, Municipal Council and
Hon. Secretary to the Coimbatore College

சுதேசமித்திரன் 18—6—14.

திருப்பூர் கைத்தொழிற் காட்சி.

:o:

சென்ற, 8, 9, 10 தேதிகளில் திருப்பூரில் முதல் தடவையாகக் கைத்தொழிற் காட்சி ஒன்று நடைபெற்றது சென்னையிலிருந்து இக்காட்சிக்கென்றே வந்திருந்த கைத்தொழில் டிபார்ட் மெண்டின் டைரெக்டராகிய மிஸ்டர் டிரஸ்ஸலர் இக்காட் சியைப் பற்றி புகழ்ந்து சொன்னதுமல்லாமல் அடுத்த வருடம் காட்சியை விமரிசையாய் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செகர்டேரிகளுக்குச் சொன்னார்.

* * *

இம்மாதிரி கைத்தொழிற் காட்சி ஏற்படுத்தவேண்டுவது அவசியமான தெனத் திருப்பூர் வாசிகளைத் தூண்டியவரும் சென்ற ஒருமாத காலமாகத் தமது சொந்த அலுவல்களைச் சற்றேனும் கவனியாமலி காட்சி இனிது நடந்தேறுவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்து கூடியவரையில் காட்சியை ஒழுங்காய் நடத்தியவரும், இன்னும் ஜில்லா கான்பரென்ஸ் விஷயமாய்ப் போது ஜனங்களுக்குத் துண்டு பத்திரிகைகள் மூலியமாயும் பிரசங்க மூலியமாயும் உற்சாகத்தையும் அக்கரையையும் உண்டாக்கியவரும் இக்காட்சியின் செகர்டேரியுமாகிய மிஸ்டர் K. S. சுப்பிரமணிய பிள்ளைக்கு இந்த ஜில்லா வாசிகள் தங்கள் நன்றியறிதலைச் செலுத்த மிகவும் கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள்.

உ

கடவுள் துணை.

திருவள்ளுவர்.

தொகுதி க.] ராக்ஷஸ-௵ பங்குனி-௴ [பகுதி க.

முகவுரை.

m 2118, N16
N14141

"கண்ணுதற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழேனை
மண்ணிடைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோ
லெண்ணிடைப் படக்கிடந்ததா வெண்ணவும் படுமோ"

எனப்பரஞ்சோதி முனிவர் புகழ்ந்ததேபோல ஏனைய கற்றோர்களும் பலவாறாகப்புகழ்ந்து கூறிய வசனங்கள் உண்மையே என்பது, இத்தமிழல்லாத ஏனைய சில பாஷைகளையும், இத்தமிழோடு சேர்த்துக்கற்றிருக்கும் இத்தமிழுலகத்திலுள்ள,— பொதுவாய் இம்மண்ணுலகத்திலுள்ள— அனைவருக்கும் நன்கு விளங்கும். அன்றியும், பழமையிலும், இலக்கண நுண்மையிலும், இலக்கியப்பெருக்கிலும் இன்னும் மற்ற இதர பெருமைகளிலும் இத்தமிழ் மொழி ஏனைய பாஷைகளுக்குத் தலைகவிழாதென்பதுந் திண்ணம். வறுமையாலும், ஆதரிப்பாரின்மையாலும், அரசு மாற்றத்தாலும், இவைபோன்ற இன்னும் பலகாரணங்களாலும் நமது தாய்மொழி சுமார் இரண்டு நூற்றாண்டாக நன்குபாராட்டிப் பயிலப்பெறாது, கற்போர் தொகை சுருங்கி, அதிக விருத்தியாகாதது கொண்டு இதன் வழித்ததாகிய சமீப காலத்திலே தோன்றின தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய பாஷைக்குச்சமமோ, தாழ்வோ என்று அறியாதார் சந்தேகிக்கக்கூடிய நிலையில் வந்திருக்கிறது. இதனை மதுரைத்தமிழ்ச்சங்கம் ஒருவாறு நிவர்த்தித்து நமது தமிழணங்கை வளர்த்துவருகிறது. அச்சங்கம் நீடூழிகாலம் இனிதுவாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

199039

இந்நிலையில், தமிழ்ப்பாஷைக்குரியமாக்கள், தங்களுடைய "எண்ணும்எழுத்துங் கண்ணெனத்தகும்" என்ற வாக்கேபோலக் கண்போன்ற, தமிழ் பாஷையை முற்படுத்தி அதற்கு நேர்ந்த குறையை நிவர்த்தி செய்து தங்கள் கடமையைச்செய்தோமென்ற சந்தோஷத்தையடைய வேண்டியதவசியமன்றோ! அவ்விதம், நமது பாஷையை முற்படுத்தப்பல வழிகளிருப்பினும், முக்கியமாய்த்தற்காலத்திற் கைக்கொள்ளவேண்டியன இரண்டுவழிகளே.

ஒன்று, நம்முன்னோர்களாலே பாடப்பெற்ற சொற்சுவையும், பொருட்சுவையும் நிறைந்த அரிய பெரிய நூல்களிலுள்ள விஷயங்களை ஸ்திரீ, புருஷர், சிறுவர், சிறுமியர் முதலிய அனைவரும் எளிதிலே படித்துத் தெரிந்துகொள்ளக்கூடிய வசன நடையாக வெளிப்படுத்தவேண்டியதோடு, வெளி வந்ததும் வராததுமான நூல்களையும், இயன்றவளவிலே விடாமுயற்சிசெய்து புதிய மாதிரியில் வெளிப்படுத்தவேண்டியது.

மற்றொன்று, இப்பரந்த உலகத்திலுள்ள நாலா பக்கங்களிலும் நடக்கிற அன்றாட விசேஷங்களைத் தெரிந்துகொண்டு, நமது இயற்கையறிவோடு செயற்கையறிவையுஞ் சம்பாதித்துக்கொள்ளச்சாதகமான வர்த்தமானப் பத்திரிகைகளை ஸ்தாபித்து நடத்தி வரவேண்டியது.

இவ்விதம், நமது பாஷையை விருத்திசெய்து வருவோமாயின், நமது தமிழணங்கும், நாளடைவிலே தன்னுடைய புராதனமாகிய மகோன்னத நிலையை அடைந்து இனிதுவிளங்கி, இகழ்ந்த சில அறியாதவராலும் நன்குமதிப்பைப்பெறும் என்பது திண்ணம்.

நிற்க, இப்பத்திரிகைக்கு நாம், "திருவள்ளுவர்" என்று பெயர் வைத்தது யாது கருதியோவெனின், நமது தாய் பாஷையாகிய தமிழிலே அப்பொய்யா மொழியார் எழுதிய தமிழ் வேதமாகிய "திருக்குறளை"ப்போற்றாத இதர மதத்தினர் இல்லையாகையாலும், அதனுள்ளே சொல்லியிருக்கிற நீதிகள், எந்தக் காலத்திலும், எல்லா மதத்தினராலும் அனுஷ்டிக்கக்கூடியதாயிருப்பதாலும், நாமும் அத்திருவள்ளுவரது சர்வமத சமரசக் கொள்கையையே கைக்கொண்டு இப்பத்திரிகையை நடத்த முன்வந்தோம் என்பதை வெளிப்படுத்துவதற்கே என்றறிக. எமக்கு இறைவன் அருள்புரிவாராக. சுபம்.

பத்திராதிபர்.

பத்திராதிபரின் குறிப்புகள்.

நமது பத்திரிகை:— இறைவன்றிருவருளால் இன்று நமது திருவள்ளுவர் முதற் புத்தகத்தின் முதற்பகுதியை வெளியிடும் பெருப்பாக்கியம் பெற்றோம். நாம் முன்னரே வெளியிட்டபடி, எமக்கு நேரிட்ட எதிர்பாராத சில அசர்ந்தப்பங்களினால், சென்ற வருடத்திலேயே வெளியிடாமற் போய்விட்டதற்காக தமிழபிமானிகள் மன்னிப்பார்களாக. இப்பத்திரிகையை வெளியிடுமாறு எம்மைத்தூண்டியும், அதற்குவேண்டிய உதவிகளையும் செய்த மெஸ்ஸர்ஸ் M. ரெங்கநாதம்பிள்ளை, C. R. பூபதி பழனியப்ப நாயகர், ஊ. வெங்கிட்டரமண அய்யர், முதலானவர்களுக்கு எமது அன்பார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறோம். இனி நமது பத்திரிகையிற் பெரும்பாலும், தமிழ், விவசாயம், கைத்தொழில், ஜனச்சாரம் முதலியவைகளுக்குச்சம்பந்தமான அரிய பெரிய விஷயங்களை எழுதியனுப்புவதாய் அநேக அறிஞர்கள் வாக்குச் செய்திருக்கின்றனர். நமது பத்திரிகை தமிழபிமானிகள் ஆதரவைப்பெற்று நன்கு நடைபெறக்கடவுள் துணைசெய்வாராக. கனவான்கள் தங்களால் இயன்றளவு உதவிசெய்து பத்திரிகையாகிய பயிரைவளர்ந்தோங்கச்செய்யவிரும்பிவேண்டிக்கொள்ளுகிறோம்.

———:)o(:———

ஏழை மாணவர்களுக்கு உதவி:— கோயமுத்தூர் கலாசாலையின் தலைமையை வகித்துவரும மிஸ்டர் வைத்தியநாத அய்யரவர்களின் நன் முயற்சியால், ஏழை மாணவர்களின் பண்டு ஒன்று ஸ்தாபிக்கப்பெறறு, பலருக்கும தக்க உதவிசெய்து வருகிறதென்பதைக்கேட்க, அய்யரவர்களின் பொது நல ஊக்கத்தைப்பெரிதும பாராட்டுகிறோம்.

மாணவர் தமிழ் சங்கம்:—இச்சங்கத்தை ஸ்தாபித்து அதற்குக்காரியதரிசியாயிருந்துவரும பள்ளபாளையம் மிஸ்டர் N. வையாபுரி பிள்ளையவர்கள், சங்கத்தை பலவழிகளிலும் நல்ல நிலைமைக்குக்கொண்டுவந்திருப்பதைக்காண எமக்கு மிகுந்த சந்தோஷத்தையுண்டாக்குகின்றது. இச்சங்கம் நீடூழி நன்கு நடைபெறுமாறு எல்லாம வல்ல கடவுள் துணை செய்வாராக.

சுயநலம் பாராட்டல்.

சுயநலம் பாரர்ட்டல் என்பது, ஒருவர், தனக்கு மாத்திரம், அல்லது, தன்னோடு, தன் குடும்பத்தாருக்கு மாத்திரம், உரிய, நன்மையைப் பாராட்டுதல், அல்லது, தனக்கு நினைப்பதுபோல, தன் மரபினர் எல்லோருக்கும், நன்மையுண்டாக நினைத்தல் ஆண்மை. அதினும், தன் மதத்தோர்க்கு நினைத்தல், மிக ஆண்மை. தன் தேசத்தார் அனைவர்க்கும் நினைத்தல் அதினும் மிக ஆண்மை தன்னையொத்த மக்கட் பிறப்பினர் அனைவருக்கும் நன்மை கருதுதல் அதினும் மிக்க ஆண்மை. தன்னைப் போன்றஎல்லா உயிர்களுக்கும் நன்மையுண்டாகக்கருதுதல் மிகமேலான ஆண்மையாம். ஆதலின் ஒவ்வொருவரும், தன் தேசத்துக்கும், தன் தேசத்தாருக்கும், தன் பாஷைக்கும், நன்மை உண்டாகப் பாடுபடுதலே, தன் நலம் பாராட்டுதலாம்.

2. நம்மவருள் அனேகர் இக்காலத்தில் நமது தேசத்தையும், நமது தேசபாஷையையும், நம்மவரையும், கீழாக நினைத்து பிறதேசத்தையும், பிறதேசத்தாரையும், பிறபாஷையையும், மேலானவையென்று மெச்சி நச்சிக்கொள்வது என்ன புத்திசாதுரியமோ! நம் தேசபாஷையினும் பிற தேச பாஷை தற்காலம் சிறந்திருக்கக்கண்டால் அவற்றிலும் நம்மவை, மிகச்சிறப்படையக் கருதுதலும், முயற்சிசெய்தலும் அறிவோடுகூடிய ஆண்மை. இவை அல்லவோ, நாகரீக தேசத்தார் கடமை?

3. இப்படிக்கு இல்லாமல், தற்காலத்தில் இங்கிலீஷ்பாஷையை வாசித்த பலர், நமதுதேசத்தை அநாகரீக தேசம் (uncivilised country) என்றும், ஆங்கிலேய மொழியை கல்லாத நம்மவரை, அநாகரீகர் (mannerless people) என்றும், தமிழ் முதலிய தேசபாஷைகளை, இழிந்த மொழிகள் (wretched languages) என்றும், நினைத்தும் பேசியும் நடக்கிறார்கள். இத்தன்மையோரது பிரபாவத்தை என்னென்று உரைப்போம், எவ்வாறு விரிப்போம், எத்தனைதரம் சிரிப்போம்.

4. காணி முழுவதிலும், விளைந்த கரும்பு பயிர் அனைத்தும், பையுள்ளும், கையுள்ளும், அடங்குதல்போல் பலநூற் பொருளையும், சாரமாய் திரட்டிவரும் இச்சஞ்சிகையை, கையில்வாங்கி தலைப்பெயரைப்பார்த்தாவது, முற்றும் பார்த்தாவது, எறிந்துவிட அல்லது சரக்குகள்கட்ட தகுவதல்ல எனபாவித்து நம் இனிய பாஷையான தமிழ்ப்பாஷை, நரை, திரை, மூப்பும், கபமும் அடைந்து புறத்திண்ணைகளில் கிடக்கச்செய்யாமல் சுதேசாபிமானமும், சுபாஷாபிமானமும் கொண்டு நடப்பிப்பது நம்மைப்பொருந்திய கடமையும் தருமமும் அல்லவோ?

தமிழபிமானி.

௳

நன்றி.

நன்றி என்பது ஒருவருக்கு இடுக்கணுண்டானபோது திரிகரணங்களாலும் மனமுவந்து செய்யும் உதவியேயாம். அதாவது பொருட்கொடையானும், சரீர முயற்சியானும், வாக்குச்சகாயத்தானும் பிறர்க்கு வேண்டற்பாலதாகிய ஓர் காரியத்தை முற்றுவித்தலும் அனனோர் மனோபீஷ்டத்தைச்சம்பூரணம் செய்தலுமே

அஃது இத்தன்மையதென அளவிடற்பாலது இயலாதெனினும், அதனைப்பெறுவான் தன்மை அளவினதாக இருக்குமென்பது கற்றுணர்ந்த அறிவினர் கொள்கை. தன்னுயிரைப்போல் மன்னுயிரைப்பாதுகாத்தல் மனிதர் இலக்கண மாதலால், மனிதர் பிறர்பால் தாம் எதிர்நோக்கிப்பெற விரும்பும், ஒவ்வொன்றையும் தாம் பிறருக்குச்செய்தல் வேண்டும். இவ்வாறு செய்வதைவிட்டுச்சிலர் தமக்கோர் சகாயம் வேண்டில், பிறரிடத்தில் பன்முறை ஓடித்திரிந்து பெறுதலும், பெற்றபின் இவரைப்பிறர் சகாயஞ்செய்யுமாறுகேட்கில் பெருமைபாராட்டியும், மௌனம் சாதித்தும், மேல் நோக்கியும், அகத்தின் நட்புக்கோடாமலும், முகத்தினளவினதாகச்சில நயப்புறுவாசகம் மொழிந்தும், அதற்குமேற் கோளாக வேறொன்றைப்புகன்றும் பின்னடைகின்றனர். ஆகலான் இவர் பதரினும் பதர். என்னே! இதினால் அவர்களின் அறிவின் சிறுமையும், விவேக சூன்யமும் அற்பததுவமும் நன்கு விளங்குகின்றன.

இவ்வுலகத்தின்கண் மானிடராய் ஜனித்ததின் பயன்தான் என்ன? ஒருவருக்கொருவர் சகாயப்படவேண்டுமென்பதல்லவா? அங்ஙனம் சகாயப்படாவிடின் உலக வியவகாரங்கள் தான் நடைபெறுவது எங்ஙனம்? ஒருவனே தனது ஜீவனோபாயத்திற்கு வேண்டியனவற்றை இயற்றிக்கொள்ளல் இயலற்பாலதா? அறிவுடையீர் அறிமின்.

ஒருவன் ஒருபொருளை ஒருவனிடத்துப்பெற்று அனுபவித்ததின் பின்பு, மீண்டொருக்கால பொருள் தந்தோன் ஆவசிகம் நேர்ந்தோ, இடுக்கணுற்றோ வேண்டுங்காலை இவன்தான் பெற்ற பொருளையோ, அதற்கு இயந்த வேறு பொருளையோ தனக்குச் சக்தியிருந்தும் கொடாதொழிவது, சோரத்தனமென்பது பட்டப்பகலன்றோ? அதுபோற்றான் ஒருவனிடத்தோர் நன்றியைப் பெறச்சக்தியிருந்தும் பிறனுக்கதைச் செய்யாதொழிவது சோரத்தனமேயாகும்.

உலகின்கண் மிருக ஜந்துக்களில் இழிபிறப்பெய்திய நாயன்றோ தன் எஜமானன் செய்த நன்றியை மறவாது அவன் இடுக்கணெய்திய காலத்து தன்னாலியன்ற கைமாறு புரிந்து கலக்கத்தை நிவர்த்திக்கின்றது. இந்நாயினுங்கடையராகிய நன்றியில்லா நயவஞ்சகர் இப்புவியில் பிறந்தென்? இருந்தென்? இறந்தென்? ஒன்றுமில். தேகமானது செழித்து வளர்ந்து பலமெய்தப்பெறவேண்டுமாயின், கரசரணாதி அவயவங்களும், அந்தக்கரண புறக்கரணங்களும் ஒன்றிற்கொன்று சகாயமாயிருந்து தத்தமக்கியன்ற வழித்தொழில் செய்து வருதல் ஆவசீகமென்பதறிந்த விஷயம். அங்ஙனமின்றி அறிவென்னும் மனிதன் மனமென்னுங் குதிரையைச்செலுத்துங்கால், கால் நடந்தோடிச் செல்லாமலும், கை ஓர்தொழிலைப்புரியாமலும், வாய்புசிக்காமலும், உதிராக்கினி ஜீரணிக்காமலுமிருநதால், தேக மென்னும் மாமிசவீட்டில் ஆன்மாவென்னும் அரூபி ஜீவிப்பானா? இம்மாமிசவீடு (தேகம்) தான் வலியுறுமா? உறாது. ஆதலால என் சகோதர சகோதரிகளே? மாதா பிதாக்கள் நமக்கு இளமையில் செய்த நன்றியை புத்திரர்கள் மறக்காமல் ஆயுள்பரியந்தம் அந்நன்றியைச்செய்தே தீரவேண்டும். அண்ணன், தம்பிகள், சகோதரம் என்பதின் இலக்கணமென்னேயோ அதனை அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். அவர்கள் மனைவியர் தத்தம் பர்த்தாவிடம் நயப்புறு வாசகம் பல புகன்று காமதுராக்கி தன் வலையிலகப்படுத்தி அண்ணன் தம்பியும் அடிதடி செய்துகொள்ளுமாறு தூண்டுதலும் பிறர்கட்குபகாரம் செய்யாது தடுத்தலும் கூடாது. அங்ஙனம் தடுப்பாரேல் நன்றியை கொன்ற பாதகராவர். இராஜாங்கத்தார் செய்த நன்றியை அவ்வரசின் குடிகள் அவசியம் சமயம் நேர்ந்துழி தங்களாலியன்ற உதவியை விசுவாசத்துடன் செய்யவேண்டும். பொதுவாகக்கூறுமிடத்து, ஒருவனுடைய சுகவிருத்தி அவனைச் சூழ்ந்த பலருடைய சுகவிருத்தியையொட்டியிருக்கின்றது. ஆதலால் தம் சுகம் விரும்பும் ஒவ்வொருவரும் தம்மாலியன்ற நனறி புரிந்து பிறர் சுகத்தைப்பாதுகாத்தல் வேண்டும். "நன்றிமறவேல்" என்றும் "நன்றி மறப்பது நன்றன்று" என்று திருவாய் மலர்ந்த விவேகிகள் சொல்லை அவலம்பிதது "வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ" என்னும் பழமொழிக்கிணங்க வாய்மதம்பேசி எட்டிபழுத்தாற்போல்வாழ்வது சுகமில்லை. தம்மைச்சூழ்ந்துள்ள தேசவாசிகளுக்கும் ஏனைய நாட்டவருக்கும் தொண்டைமான் முதல் தோட்டிவரை ஒவ்வொருவனும் தம்மாலியன்ற நன்றியைச் செய்ய முன்வரவேண்டும். அங்ஙனம் செய்யானேல் சுகாலோக்கியம் எட்டுணைத்தும் கிட்டாது. கிட்டாதபோது மறுமையின் பயனும் எட்டாதென்பது துணிபு. சுபம்.

C. R. பூபதி பழனியப்ப நாயகர்.

பயிர்த்தொழில்.

1. இவ்வுலகில், கடவுளால் மனிதருக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஜீவனோபாயங்கள். பலவகையாய் இருக்கின்றனவே! அவைகளில் இதர தொழில் முயற்சியின் காரியம். பொருள் சம்பாதித்தலும், அப்பொருள் சம்பாதித்தலின் காரியம், ஜீவனோபாயமாயிருக்க, பயிர்த்தொழிலின் காரியம். நேரே ஜீவனோபாயமாகையால், 'உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்' என. பெரியோர் கூறுகின்றனர். மேலேகண்டபடி, நாம் உயிர் வாழ்ந்து, சுகிப்பதற்கு தகுந்த பல தொழில்களில் விவஸாயம் சிறந்தது. இதற்கு உழவு, பயிர்த்தொழில் வேளாண்மை என்றும் சொல்வதுண்டு. உலகத்தில் வாழும் பலபிராணிகளில் மனிதன் ஒருவனே சுபாவமாக முளைக்கின்ற பயிர்களைவிட்டு. தனக்கிஷ்டமான பயிர்களைக்கருதி தகுந்த இடங்களைத்தேடி பயிர் இடுகின்றனன். சகல உயிர்களுக்கும் தாயாகிய இப் பூமியானது, எவ்வளவு செழிப்பு உள்ளதாய் இருந்தபோதிலும் விசேஷ உணவை தரத்தக்க பூண்டுகள் இன்னவை என்று தெரிந்தெடுத்து பயிர் செய்யப்பட்டால் ஒழிய மனிதசாதி அபிவிர்த்தியாகி, நாகரீகம் அடைவதில்லை என்றும், சகலதேச சரித்திரத்தாலும் ஸ்பஷ்டம் ஆகின்றது.

2. இந்த விஷயத்தைப்பற்றி உலகத்தில் உள்ள பற்பல தேச சரித்திரத்தை சற்றே நிதானித்துப்பார்ப்போம். இட்டாலி, போர்ச்சுகல், ஸ்பெயின் முதலிய தேசங்கள் தம் தம் காலமுறையிலே வர்த்தக முயற்சிகளினால் மஹா பிரவிர்த்தி அடைந்திருந்தன. அத்தேசத்தார் தம்மைவிட வர்த்தகத்தில் அதிக முயற்சியும், கால அநுகூலமும், அடையப்பெற்ற வேறு தேசத்தார் ஓங்கஓங்க, மெல்ல மெல்ல, நாளாவர்த்தியில் க்ஷீணித்துப்போய் விட்டார்கள். விவஸாயத்தில் அந்த தேசவாசிகளுக்கு சிரத்தை இல்லாமல் போனதே அவர்களுடைய க்ஷீணத்துக்கு காரணம். இங்கிலாந்து தேசத்தார் வெகுகாலம் வரையில் பயிர்த்தொழிலின் அருமைப்பாட்டை அறியாதவர்களாய் இருந்தார்கள். 1790-ம் வருஷத்தில் விவசாய அபிவிருத்திக்காக ஓர் சங்கம் அங்கு ஸ்தாபிக்கப்பட்டது.

3. அமெரிக்காகண்டத்தில் பிரபுக்களாயிருக்கப் பட்டவர்களில் பெரும்பான்மையோர் உழவர்களேயாம். நீராவி எந்திரங்களைக்கொண்டும், திவ்வியமான குதிரைகளைக்கொண்டும் மற்றும் பலபல விலை உயர்ந்த உபகரணங்களைக்கொண்டும் அங்கு நடத்தப்படும் உழவுத்தொழிலின் விசித்திர வேலைப்பாட்டின் காக்ஷியை கண்டவர்கள் காலத்திரயத்தும், உழவுத்தொழிலை கனவிலும் இகழார். ஆகையால் உலகத்தில் உள்ள மற்ற எல்லா தொழில்களைக்காட்டினும் "உழவே தலை" என்றபடி உழவே மஹாகௌரவமானது என்பதையும், அதுவே ஸ்வயேச்சையான வாழ்க்கை என்னும் புதல்வனை அருமையாக வளர்த்து எடுக்கும் செவிலித்தாய் என்பதையும் கண்கூடாகக்காணலாம்.

4. இந்தியாவுக்கு ஆதியில் வந்த பெருமைக்கெல்லாம், குடிகள் உழவுத்தொழிலை விசேஷமாகக்கொண்டதே முக்கிய காரணம் என்பதையும், இப்போது அதற்கு நேரிட்ட சிறுமைக்கெல்லாம் அவ் உழவுத்தொழிலை குடிகள் அலட்சியம் செய்ததே முக்கியகாரணம் என்பதையும் மறுக்கார். உழவு அவமானமாகிய தொழில் என்று ஒருபோதும் அலட்சியம் செய்யப்படவில்லை. இந்தியாவில் இப்போது விவசாயத்தை அலட்சியம் செய்து அதை அவமானமாகிய தொழில் என்று நினைப்பவர்கள் தங்களுடைய தேசத்தின் புராதன நிலைமையை அறியப்பெறாதவர்கள். தம் முன்னோராகிய மேலோர் உழவுத்தொழிலைக்குறித்து கீழே வியந்துரைத்த அற்புத வசனங்களை அவர்கள் அறியார்போலும்,

"பூமி திருந்தி யுண்."
"மேழைச் செல்வம் கோடைப்படாது."
"சீரைத்தேடி னேரைத்தேடு."
"தோழதூண் சுவையின் உழதூண் இனிது."
"உழுதுண்டுவாழ் வதற்கோப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு."

5. ஆனால் இப்போதைக்கு சிலகாலமாய் பண்ணை ஆள்கள் என்று பெயர்பெற்ற விவேக சூனியர்களே பெரும்பாலும் உழவுத்தொழிலை கையாண்டு வருகிறார்கள். ஆகையால் அந்த தொழில் கேவலம், மந்த மதிகளின் தொழில் என்று பெரும்பான்மையோர் நினைப்பதற்கு இடம் இருக்கிறது.

6. பசி என்னும் தேக உபாதையை நோய் நீக்கத்தக்க உழவுத்தொழிலை விடுத்து பிறதொழில்களில் எல்லாம் ஒருவன் மெய்வருந்தி உழலுவது, கரும்பு இருக்க, இரும்பு கடித்து அலைவதைப்போல் ஆகும். இந்த உழவுத்தொழிலை நமது முன்னோர்கள் ஒருவரிடத்தில் சேவித்து உண்ணும் உணவிலும், உழுது பயிரிட்டு உண்ணும் உணவே இனிய உணவாயும் அது மிகச்சிறந்ததாக கொண்டார்கள் என்பதற்கும் அதனையே புருஷ லக்ஷணத்துக்குரிய தொழிலாக மதித்து வந்தார்கள் என்பதற்கும், மற்ற எல்லாத்தொழில்களும் அதின் சார்பை நாடவேண்டியதென்றும், அது ஏனைய தொழில்கள் யாவும் தலை எடுத்து ஒங்குவதற்கு இன்றியமையாததென்றும் கருதி இருந்தார்கள் என்பதற்கும் அனேக திருஷ்டாந்தங்கள் இருக்கின்றன.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம்,
தொழுதுண்டு பின் செல்பவர்."

7. விவசாயம் மனிதருடைய அபிவிர்த்திக்கும், நாகரீகத்துக்குமே அன்று. அவர்கள் உயிருடன் குடும்பிகளாக வாழ்ந்திருப்பதற்கே அவசிய

மாக இருந்தபடியால், தான், இந்த சிறந்த தொழில், மற்ற எல்லா தொழில்களுக்கும், சாஸ்திரங்களுக்கும் முன்பு, மனிதர், விசேஷ அறிவின்றி, மூடராய் இருந்தபோதே, அவர்களில், கண்டுபிடித்து அப்பியவிக்கப் பட்டது.

8. தொன்று தொட்டு வழங்கிவரும், வெகு தந்திரமற்ற, எந்திர மாகிய கலப்பையன்றி, வேறு சாதனங்களை, நம்மவர் அநேகர், கண்டு இராதபடியால், வேளாண்மையை, அபிவிர்த்தி செய்யக்கூடுமென்றுநம்ப சந்தேகப்படலாம். ஆயினும், இது சரியல்லவென்று, ஷை கலப்பையினுலேயே, அறிந்துகொள்ளலாம். இந்த சிறு உபாயம் அற்ற கருவியில்லாமல், நாம், இப்போது அனுபவித்து வரும் அனேக ருசிகரமான, பல வித பதார்த்தங்களும், நமக்கு கிடைக்கமாட்டாது அல்லவா? இப்போது நாம் செய்து வருகிற, இச்சிறு முயற்சினுலேயே, இவ்வளவு பிரயோஜனத்தை, அடைவோமாகில், இன்னும், சற்றேமுயன்றால், விசேஷலாபம் பெற்று, லோகோபகாரிகளாவோம் என்பதற்கு சந்தேகமோ?

9. மேலும், இக்காலத்தில் ஐரோப்பிய தேசங்களில் இருந்துவரும் தனவான்கள், நமது கண்முன்பாகவே, சேர்வராயன் மலை, நீலகிரிமலை, முதலிய மலைப்பிரதேசங்களிலும், மற்ற உள்நாடுகளிலும், காப்பிகொட்டை; உருளைக்கிழங்கு, பருத்தி முதலியவற்றை பயிர்செய்து, இலக்ஷம் இலக்ஷமாய் லாபத்தை அடைவது, நாம் பார்க்கிறோம் அல்லவா? உலகத்தில் உள்ள, அநேக நாடுகளைப்பார்க்கிலும், நமது தேசம், விசேஷ செழுமையும், கொழுப்பும், மற்றும் அனேக சற்குணங்கள் உண்டாய் இருந்தும், நம்மிடத்து சாஸ்திர கியானமும், பெரு முயற்சியும், இல்லாதபடியால் நாம் வர்த்தகத்திலும், செல்வத்திலும், அன்னிய தேசத்தாருக்கு, நாளுக்குநாள், பின்னிட்டுப்போனோம்.

10. இதுநிற்க, மஹம்மதீயர் முதலிய பிரதேசத்து அரசர்களும், உள்நாட்டு குறுநில மன்னர்களும், நமது தேசத்து குடிகளை, அல்லும் பகலும், ஹிம்ஸித்து வந்தார்கள். பின்னும் அநேகவித காரணங்கள், உழவுத்தொழிலுக்கு இடையூறாய் இருந்தன என்பதற்கு, இந்துதேச சரித்திரம் சாக்ஷிபகரத்தக்கது. உழவுத் தொழிலைக் கைவிட்டவர்கள், நன்றாய் வாசித்து, சேவகம் முதலியவற்றில் பிரவர்த்திக்கத் தலைப்பட்டார்கள். வாசித்தவர்கள் எல்லாம், வெகுசாய், சேவக உத்தியோகத்தையே நாடிவந்தபடியாலும், சாஸ்திர உணர்ச்சியில்லாத பண்ணை, ஆள்கள்

முதலிய விவேக சூனியர்களே, நாட்டுப்புறங்களில், பிற்காலத்து உழவுத் தொழிலில், பிரவர்த்தித்து வந்தபடியாலும், நமது பூர்வீக சித்தாந்தத்தையும், விவஸாய சாஸ்திரங்களேயும் அறியாதவர்களாய், நம்மவர்கள், இப்போது விவஸாயத்தை, அலட்சியம் செய்கிறார்கள்.

11. ஆனால் கல்விமான்களால் தற்சமயம் கண்டுபிடிக்கப்பட்ட நூதனகருவிகளேக்கொண்டு விவஸாயத்தை விடாமுயற்சியோடு விருத்தி செய்தால் தக்க பலன்கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. அன்றியும், சுயேச்சையாய், தன் இஷ்டப்படி, நித்தியம், தன் குலாசாரத்துக்கு தக்கபடி, ஸ்நானம் ஜபதபம், முதலியவற்றோடு, இம்மையில் தக்க போக பாக்கியங்களேயும், மறுமையில் சொர்க்காதி போகங்களேயும், அனுபவித்து, முடிவில் பிறவாநிலையாகிய பேரின்பசாகரத்தையும் அடைவர் ஆவர். ஆதலால், மிஞ்சி, இங்கிலீஷ்பாஷையை நன்கு கற்றவர்கள், தாங்கள் என்ன வாசித்திருந்தும், தங்களுக்கு, கவர்ன்மெண்டு உத்தியோகம் கிடைக்கவில்லை என்கிற, ஏக்கத்தை விட்டு, ஒரு பாஷையில், நன்குபயின்றது வீண்போகாது. என்னும் ஊக்கத்துடன், மேல்கண்டபடி பயிர்த்தொழிலில் பிரவேசித்து, அதற்கு வேண்டிய முயற்சி செய்து, தங்களேயும் தங்களே அடுத்தவர்களேயும் காப்பாற்றி கடைத்தேறுவாராம்.

கைத்தொழில் முயற்சி.

சிலகாலமாய் நம்மவர்கள் கைத்தொழிலபிவிருத்தியில் மிகவும் அக்கரைபாராட்டி ஐரோப்பியதேயத்தினரைப்போன்று சாமான்களே இயந்திரங்களின் உதவியால் செய்து, அவர்களுடன் போட்டிபோட முன்வருவதைப்பார்க்கின்றோம். இந்த முயற்சியின் உத்தேசமாவது:- அயல் நாடுகளினின்று இறக்குமதியாகும் சாமான்களே வாங்குவதால் இந்தியாவின் செல்வம் அன்னிய தேசங்களுக்குப் போய்விடுவதைத் தடுக்கும்பொருட்டும், நமது செல்வம் வெளிநாடுகளுக்குப்போகாமல் நிறுத்த இந்தியாவின் எல்லேக்குள்ளாகவே நமது பணத்தைப் பரிவர்த்தனம் செய்ய வேண்டுமென்பதேயாகும். இது நல்ல காரியந்தான்; ஆனால் இவ்வாறு செய்யப்படும் சாமான்களின் தன்மை என்னவென்று சற்றுயோசிப்போம். நாம் வாங்கும் ஐரோப்பிய சாமான்களில் அநேகமாய் 100-க்கு 90-பங்கு விகாரமாகவேனும், உபயோக

மற்றதாகவேனும் அல்லது அவ்விரண்டுவித குணங்களையும் உடையதாயுமிருக்கின்றது. ஐரோப்பியரைப்போல் வேஷந்தரிக்கவேண்டுமென்ற பரானுகரண இச்சையால் நாம் சுகபோகத்திற்காக வாங்கும் வஸ்துக்கள் பெரும்பான்மையும் அநாவசியமாயிருப்பதோடு சிலசமயம் கெடுதலை உண்டாக்குவையாயுமிருக்கின்றன. அப்படிப்பட்டவைகளை நம்நாட்டிலேயே செய்து அவற்றை நாம் வாங்கி இன்னும் அதிகமாய் கெட்டுப்போவதைவிட, அவற்றை உபயோகிக்காமலே விட்டுவிடுவோமாகில் நமக்கு எவ்வளவோ லாபமுண்டாகும்.

ஐரோப்பிய தேசங்களில் கிழக்குதேசத்து விற்பனைக்கென்றே சிலநயமான கசுமல சாமான்கள் ஏராளமாய் செய்யப்படுகின்றன. கல்வியும் நாகரீகமுள்ள எவனும் அவற்றை இங்கிலாந்திலே வாங்குவதில்லை ஐரோப்பிய "தாஹா"வாக தங்கள் வீடுகளை அலங்கரிக்க விரும்பும் இந்தியர்கள் அந்தப்பண்டங்களை வெகு ஆவலுடன் வாங்கிவிடுகிறார்கள். அதுவுங்கொஞ்சமாக வாங்குகிறார்களா? அவர்களுடைய "ட்ராயிங்ரூம்"களைப்பார்த்தால் சிறு ஷாப்புகளைப்போல் தோன்றுமேயன்றி வாசயோக்கியமான அடையாளம் ஒன்றாவது கிடையாது. நமது பரிசுத்த ஆலயங்களுக்கூட வெளிப்பகட்டான ரஸகுண்டுகளென்ன, டம்பமான காந்தவிளக்குகளென்ன, இவற்றின் உபத்திரவத்தினின்றும் தப்பவில்லை. நமது பித்தளை வெண்கலப் பாத்திரங்கள் இருந்த ஸ்தானத்தை நயமான கிளாசு (கண்ணாடி) சாமான்களும் விகாரமான எனுமல் பாத்திரங்களும் ஆக்கிரமித்துவிட்டன. இவ்விஷயத்தில் ஏழைகளைப் போலவே பணக்காரரும் அநியாயம் செய்கிறார்கள். இவ்வளவும் வீண்பணச்சிலவுதானே. அப்படியிருக்க அப்பண்டங்கள் செய்யப்படும் ஸ்தானத்தை ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு மாற்றிவிடுவதால் நமக்கு வந்துவிடப்போகிற லாபமென்ன? ஒரு லாபமுங்கிடையாது. இது நிச்சயம். இது நிற்க, நம்பூர்வீக கைத்தொழில் க்ஷீணித்துப்போனது சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டிலேதான். ஏனெனில் பனிரெ

ண்டாவது நூற்றாண்டுமுதல் பதினைந்தாம் நூற்றாண்டுவரையில் ஒவ்வொரு நாட்டாரும பிறநாட்டாரிடத்திலிருந்து அவசியமாய்த் தெரிந்துகொள்ளவேண்டியதைக் கற்று, தங்கள் பழைய ஐதீகங்களையும் பாதுகாத்துககொண்டு அதன்மேல் அபிவிருத்தியடைந்து வந்தார்கள்.

ஆனால் பதினாறும் நூற்றாண்டு முதல் ஐரோப்பிய தேசங்களில் உண்டான இயந்திர மாறுபாட்டால் கலைகள் கைத்தொழில்களின் விருத்தி வெகுவாய் மாறி பழைப ஐதீகங்கள் குன்றிப்போய்விட்டது. மேற்குதேயத்தின் ஜனங்கள் லாபத்திற்காக சாமான்களையும் சரக்குகளையுஞ் செய்யக் கருகினார்களேயன்றி நல்ல சாமான்களைச்செய்யவேண்டுமென்ற எண்ணத்தை விட்டு விட்டார்கள். நாம் இயந்திரத்தொழில் விஷயத்தில் ஆரம்பதசையிலேயிருந்துகொண்டிருந்தும், இருநூறு வருஷங்களின் ஏற்றத்தை முற்பட்டு அடைந்திருக்கும் மேற்கு தேசங்களைப்போல் ஆய்விடப்பார்த்துக்கொண்டிருக்கிறோம். இதைவிட்டு நமக்கு ஏகதேசத்தில் சொந்தமாயுள்ள பழைய ஐதீகங்களையேபின்பற்றியிருப்போமானால், நம் கைத்தொழில்களைக்கண்டிப்பாய் அபிவிருத்தி செய்திருப்போம். பிறரைப்பார்த்து அவர்கள்போல் வேஷம்தரிப்பதாகிய ‘பரானுகரணம்’ என்ற தற்கால முயற்சியில் நாம் இன்னும் கொஞ்சகாலம் விடாமல் கடிப்போமாயின், நமது சித்திரக்கலைகள் கைத்தொழில்களின் புராதன ஐதீகங்களெல்லாம் இருந்தஇடம்தெரியாமல் அடியோடேமறைந்துபோய்விடும். ஐரோப்பியக்கல்விமான்கள் அப்படிப்பட்டவைகளை சித்திரப் பொருட்காட்சிச் சாலையில் சேர்த்து வைப்பார்களாகையால், அங்குமாத்திரம் அவற்றை ஒருவேளை பார்த்தால் பார்க்கலாம். நமது பூர்வ கலைகளிலும், கைத்தொழில்களிலும் இந்நாட்டுக்குச் சமமாக வெறெந்த நாடும் பிரசித்திபெறவில்லையாகையால் இந்தியராகிய நாம் அக்கலைகளையும் கைத்தொழில்களையும் அபிவிருத்திசெய்ய முயலவேண்டும். அவை பிறநாட்டாருக்குள்ளவற்றை விட வேறானவையாயிருக்கலாமேயன்றி, அவற்றிற்குத் தாழ்ந்தவையாயிரா.

(தொடரும்.)

விவாஹம்.

விவாஹத்தை தேவ நியமனமாகப் பாராட்டுதல்வேண்டும். அப்படிக்கல்லாமல் விவாஹத்தை சாதாரண சிற்றின்ப சாங்கிச் சென்று மட்டும் நினைப்பவர் பதிதராவார்கள். விவாஹம்செய்து கொள்ளுபவர்கள், கேவலம் காம சுகத்துக்காக கட்டுப்பட்டவர்களாகஇராமல், வைதீக சுகத்துக்கும் கடவுளால் கட்டுப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

சில தேசங்களில் விவாஹம் செய்துகொள்பவர்கள், துரைத்தனத்தாரால் நியமிக்கலான ரிஜிஸ்டர் செய்து கொள்ளுகின்றனர். இப்படிச்செய்து கொள்ளுதல் கேவலம் உலக சம்பந்தமானதே; உண்மையான ஸ்திரி புருஷர்கள் தாம் செய்துகொள்ளும் விவாஹம், கடவுளுக்கு முன் ரிஜிஸ்தர் செய்துகொண்டதாக எண்ணி எப்போதும் ஒரு மனப்பட்டு வாழ்வார்கள். மேலும், இப்போது செய்துகொள்ளும் விவாஹமானது பரிபூரணமானதாகக்கொள்ளாமல, பரலோக சுகத்துக்காக பிரவேசப்படியாகக்கொள்ளவேண்டும். இவ்வுலகில் மணமகன் பாதி, மணமகள் பாதியாகவும், என்றால், இருவரும்கூடி ஓர் தேகஉருவானவர்களாகவும் இருப்பதால், இவர்கள் தெய்வபக்தியினால் இருவரும் பூரணமாகி பிர்மானந்தமடையவேண்டும்.

ஆகையால் மணமகன் கல்வி, கேள்வி, சக்தி முதலானதுகளில் மணமகளைப்பார்க்கிலும் சிறந்தவனென்றும், அதைக்கொண்டு, மணமகளை அடிமையாகவும், கூலிவேலைக்காரியாகவும், பாவித்து அசட்டை செய்தல் கூடாது. அதேமாதிரியாக மணமகளும், அழகினாலும், அகங்காரத்தினாலும் அடங்காப்பிடாரியாகி தனது கணவனை கூலிவேலைக்காரனாக மதித்து ஆளக்கூடாது. எந்தப்புருஷன் தன் மனைவியை அவதிப்படச் செய்கிறானோ; அவன் புருஷன் என்னும் பெயருக்குத் தகாத படுபாவியாவான்; அதேமாதிரியாகவே, எந்தப் பத்தினிதனது புருஷனை அடிமையாக்கி அடக்கி ஆளுகிறாளோ; அவள் பத்தினியென்ற பெயருக்

குத்தக்கவளாகாமல் படிநீலியாவாள் மேலும் புருஷனும் பத்தி ணியும் ஓரே சமமானவர்களாகவிருக்கினும், புருஷன் தனக்கு இயற்கையாக உடைய புருஷசக்தியை இழந்து பேடியாகாமலும் அதேமாதிரியாகவே பத்தினிக்கு இயற்கையாக உடைய பேதமை முதலான குணங்களைவிட்டு புருஷனைப்போல் பெருமை பாராட் டாமலும் இருவரும் தம்தம் இயற்கைக்குத் தக்க நிலையில்நின்று ஒருமனப்பட்டு வாழவேண்டும்.

எந்த ஸ்திரீயானவள் தனக்கு இயற்கையாக வுடைய பேத மை, மடம், நாணம், அச்சம் பயிர்ப்பு முதலான குணங்களை, விட்டு புருஷரைப்போல் ஆட்டம் பாட்டங்களுக்கும், மல்யுத்தங் களுக்கும், கணவன் காணாவிடங்களுக்கும் பிரவேசித்து புருஷ ரைப்போலிருக்கப் பார்க்கிறாளோ, அவள் வீடு இடுகாடாகி அவ ள ஜன்மம பாழ்ஜன்மமாகிவிடும். மேலும் விவாஹம் செய்து கொண்ட ஸ்திரியின்பேரில் அவளது கணவனுக்கு உண்மையான நம்பிக்கையிருத்தல்வேண்டும். அதேமாதிரியாகவே, மனைவிக் கும் புருஷன்பேரில் நம்பிக்கையிருத்தல் வேண்டும். விபசார மானது கேவலம் பிறருடைய தேஹசம்பந்தத்தினால் மாத்திர மல்ல; பிறரைக்கண்டும், கேட்டும், மோஹிக்கும்போதே, அவர் கள் மனது விபசாரத்தனமாகிவிட்டது. ஆகவே தேக சம்பந்த த்தினால் பிறருடன் விபசரிப்பதைப்பார்க்கிலும், மனதினால் விப சரிப்பதுதான் மகா கொடியபாவம். இதை மணமகனும் மண மகளும், முக்கியமாக மனதில் வைக்க வேண்டும். மேலும்சிலர் விபசரிக்காமலிருக்கத்தகுந்த காவலிலும், இருட்டறைகளிலும், இக்கட்டுகளிலும் வைப்பதுண்டு. இப்படிச் செய்தல் பயித்தியக் காரத்தனம். ஏனெனில் மணமகன் மணமகள் இருவரும் உண் மையான விசுவாசத்திலும், அன்பினாலும், தெய்வபக்தியினா லும் பரிசுத்த பந்தத்திற் கட்டுப்பட்டவர்களாக இருக்கவேண்டு மே ஒழிய, மற்றப்படி வெளிதந்திரங்களினாலல்ல. உத்தமபத்தி னிக்கு தனது முந்தாணியே சாக்ஷி, உத்தம புருஷனுக்கு தனது கௌபீனமேசாக்ஷி என்று நினைக்கவேண்டும். பதிவிரதா தருமத்

துடன், பரிசுத்த அன்பும் கூட இருக்கவேண்டும் அப்போது பதிவிரதம் என்னும் முகையானது, பரிசுத்த அன்பு என்னும் புஷ்பமாகி பிரகாசித்து பரிமளம் வீசும். ஆகையால், புருஷனும் மனைவியும், எப்போதும் அன்பினால் கட்டுண்டு இடைவிடாமல் இருவருடைய ஹிருதயமும் ஒன்றாக்க முயலவேண்டும். எவ்விடத்தில் புருஷனும், மனைவியும் கூடி ஒரு மனப்பட்டு பிரபஞ்ச ஆசைகளை விட்டொழித்து கடவுளைப்பாடி ஆடி பிரார்த்திக்கின்றாரோ அந்தஇடம் பரலோகமாகிய பிரத்தியக்ஷ தேவலோகமென்பதற்கு ஆக்ஷேபனையில்லை. அதேமாதிரியாகவே, நாளாவட்டத்தில் இருவருடைய ஹிருதயமும் பிரபஞ்ச ஆசைகளை விட்டொழித்து, பூரண பக்தியில் மூழ்கி; சாதாரணமும்; பரிசுத்தமும் பிரம்மானந்தமுமான பரிசுத்தானந்த நாட்டில் எழுந்தருளி பல்லாண்டு பல்லாண்டாக சாஸ்வித சுகாநந்தத்திலிருப்பார்களாக. சுபம்.

சமாசாரக்குறிப்புகள்.

உடுமலைப்பேட்டை தாழ்ந்த வகுப்பினரின் முன்னேற்ற சங்கம்:—சென்ற மார்கழி—மீ திருவாதிரையன்று இச்சங்கத்தின் ஆதரவின் கீழ் பஞ்சமபாடசாலையின் வருடாந்திர உற்சவம் விமரிசையாய் நடந்தேறியது. இச்சங்கத்தை ஸ்தாபித்து அதன் முன்னேற்றத்தில் மிகவும் அக்கறை கொண்டுள்ள ஸ்ரீமான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பி. ஏ., பி. எல்., அவர்களின் பொது நல ஊக்கம் சிலாகிக்கத் தக்கதேயாகும்.

தர்மசத்திரம்:— உடுமலைப்பேட்டை ஸ்ரீமான் மலையாண்டி செட்டியாரவர்களால் பொது ஜன உபயோகத்திற்கென்று கட்டப்பட்டுள்ள தர்மசத்திரத்தை சென்ற ஜனவரி மீ 21-தேதியன்று நமது ஜில்லா நிர்வாக அதிகாரியாகிய கனம் கம்மிங், ஐ. சி. எஸ். திறந்து வைத்தார். அன்றையதினம் செட்டியாரவர்களால் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு அன்னமிடப்பட்டது.

பெரியோர்களின் அபிப்பிராயங்கள்.

தாழ்ந்த வகுப்பார்:— தாழ்ந்த வகுப்பார்களை புத்தியிலும் சன்மார்க்கத்திலும், சரீரவன்மையிலும் உயர்த்த எவனொருவன் பாடுபடுகிறானோ அவன் தனக்கே ஆதம சுத்தியைச் செய்துகொண்டவனாகிறான். இந்த தேசத்தின் பிற்கால க்ஷேமமானது எல்லாவகுப்புகளையும் சமமாக நடத்துவதைப் பொருத்ததாகவேயிருக்கிறது. சர். என். சந்தரவர்க்கர்.

கல்வி:—"குழந்தையைப்பட்டினி போடுகிற தாய்தகப்பனை ராஜாங்கச்சட்டம் தண்டிக்கிறது எப்படியோ அப்படியே குழந்தைக்கு கல்வி என்னும் பாலை யூட்டாமல் சுருங்கவைக்கிற தாய் தகப்பனை கர்ம விதியானது தண்டிக்கிறது" மிஸஸ் அன்னி பெசண்டு.

யுக்திக்குறிப்புகள்.

வக்கீல்:—ஏனப்பா! என்சாமர்த்தியத்தைப் பார். நீ கன்னம் போட்டு கட்டிடததுக்குள் நுழைந்து திருடியது உண்மையானாலும் என் சாமர்த்தியத்தால் உனக்கு தண்டனை கிடைக்காதபடி செய்தேனே என்னிடம் உனக்கு நன்றியிருக்கட்டும்.

திருடன்:—சுவாமி! அப்படியே ஆகட்டும். நான் வருகிற வெள்ளிக்கிழமையன்று தங்கள் வீட்டுக்கு வருகிறேன்.

வக்கீல்:—அப்பா! நீ வருவதில் எனக்கு ஆக்ஷேபமில்லை. ஆனால் பகற்காலத்தில் வா.

ஓர் சீமாட்டியைப்பார்த்து ஒருவர் உங்கள் வயது என்னவென்று கேட்டதற்கு 40 என்று சொல்லி, அதை ஸ்திரப்படுத்தும்படி பக்கத்திலிருந்த பிரபுவை நோக்கி, என் மைத்துனரே! என் வயது நாற்பதென்று சொன்னேன் அது சரியல்லவா? என்றுகேட்க, "அதற்கு ஆக்ஷேபமென்ன? சென்ற பத்து வருடகாலமாக நீர் பலதரம் இம்மாதிரியே சொல்லி வருவதை நான் கேட்டிருக்கின்றேனே" என்றார்.

பலசரக்கு.

"கடவுள் எங்கேயிருக்கிறார்? அவரை நாம் காணுவதெப்படி?" கடலில் முத்துக்களிருக்கின்றன. அவைகளைக்காணவேண்டுமானால் ஆழத்தில் மூழ்கி அடிக்கடி தேடவேண்டும். அதுபோல் கடவுள் இவ்வுலகத்திலேயே யிருக்கிறார். நீ சிரமப்பட்டு ஞானத்தையடைந்தால் அவரைக்காண முடியும்.

முன்னொரு சமயம் நல்ல புத்திசாலியான ஓர் ஸ்திரீயினிடம் அதிபால்யன் ஒருவன் தான் படித்த படிப்பின் திறத்தைக்காட்டவேண்டி பற்பல விஷயங்களையும்பற்றிப் பேசிக் கடைசியில் ஸ்திரீகளின் துர்நடத்தையை உதகரிக்கும் அநேக கதைகள் சொல்லி "சேலைகட்டிய மாதரை நம்பொணாது நம்பொணாது" என்று முடியும் காளப்பாட்டைப் பாடினான். அவன் செய்த பிரசங்கத்தைக் கேட்ட அப்பெண்மணி மிகுந்த கோபம் கொண்டு அவனை நோக்கி 'அடாபிள்ளையாண்டான், நீ படித்த பாடங்களையெல்லாம் நான் கேட்டு ஆநந்தமடைந்தேன். நான் ஒரு கதை சொல்லுகிறேன் கேள" என்று சொல்லத்தொடங்கினாள். "கதைக்குக்காலில்லை" யென்றபடி, முன்னொரு சமயம் ஓர் மனுஷனும் ஓர் ஸிம்ஹமும் நண்பராயினர். அவர்கள் ஒரு நாள் வேடிக்கையாகச் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் அம்மனுஷன் தன்னிடமுள்ள ஒரு படத்தைக்காட்டி, ஹே, சிம்ஹமே, இதோ பார் இந்த படத்தை, உன்னினமொன்றை என்னினத்தான் கொல்லுகிறான் பார்த்தையா வென்றான். சிங்கம் மனவருத்தம் கொண்டு அவனை நோக்கி "நண்பா, மனிதர்களுக்குள் சித்திரக்காரர்களிருப்பதுபோல் என்னினத்தாருக்குளும் சித்திரக்காரர்களிருந்தால் நீ காட்டிய ஒரு படத்துக்குப் பிரதிபாக 100 படம் நான் உனக்குக் காண்பிப்பேன். அவைகளிலெல்லாம் என்னினத்தார்கள் மனிதர்களை கணக்கு வழக்கில்லாமல் கொன்றிருக்கும் விஷயம் கண்டிருக்கும்" என்றது. இதுபோல் ஆண்பிள்ளைகள் சரித்திரம் எழுதக் கற்றிருப்பதால் பெண்பிள்ளைகள் தலைமேலே பழியைப்போட்டு அவர்கள் துர்நடத்தைக் காரர்களென்று எழுதியிருக்கிறார்கள். வீணாகப்பெண்பிள்ளைகளைத் தூஷிப்பதுபாபமன்றோ வென்றாள்.

இனாம்! இனாம்!! இனாம்!!!

தற்சமயம் நடக்கும் ஐரோப்பிய யுத்தத்தினால் இங்கி தினுசுகள் கிடைக்காமல் அனைவரும் கஷ்டப்படுவதை உத்தேசித்து பலவித இங்கி தினுசுகளும் சுயமாக இந்தியச் சரக்குகளைக் கொண்டு தயார் செய்து சவல்ப விலைக்கு விற்று வருகிறோம்.

புளூ பிளாக் இங்கு பவுடர்.

1–சோ அதாவது 24 ரூபாய் எடையுள்ள இங்கி பவுடர் எந்த விலாசத்திற்கும் ஒருமுறை இனாமாக அனுப்பப்படும். இதைக்கொண்டு மூன்றுபெரிய புட்டிகள் நிறப்ப இங்கி செய்து கொள்ள முடியும். தபால் சிலவு பாக்கிங் சிலவு முதலியவற்றிற்காக முன்னதாகவே நாலணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும் வி. பி. யில் அனுப்பமுடியாது.

N. B. காலணா வீதம் விற்கக்கூடிய இங்கி பொட்டணங்களும் மொத்தமாக சலீசான விலைக்கு எங்களிடம் கிடைக்கும்.

விலாசம்

மானேஜர்,

கோகலே சுதேச வர்த்தக ஏஜன்ஸி,

கோயமுத்தூர்.

விளம்பரம்.

ங்கள் தாய்தேச கைத்தொழில்களை ஆதரியுங்கள்.

முதல்தரமான வல்லம் ஸ்படிகக்கற்களினால் செதுக்கப்பட்ட மூக்குக்கண்ணாடிகளும் அதற்குத்தகுதியான பொன், வெள்ளி, ரோல்டுகோல்ட் நிக்கல் சில்வர் முதலான கட்டிடங்களும் சரசமான விலைக்குக் கொடுக்கிறோம். வேண்டியவர்கள் வயது, உத்தியோகம், முதலானதுகளைத் தெரிவித்தால் வி. பி. மூலியமாய் அனுப்பப்படும்.

T. ராஜு அண்டு கம்பெனி

மூக்குக்கண்ணாடி வியாபாரம்,

கோயமுத்தூர்.